பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

21 10 2024 **MONDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விமானத்துறையின் வளர்ச்சியில் உடான் திட்டம் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டுவந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் காரணமாக நக்சலைட் பிரச்சினை கட்டுக்குள் உள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. தீபாவளி பண்டிகையையொட்டி, 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, தீவிரப்புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. வளரும் அணிகளுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா "ஏ" – ஐக்கிய அரபு எமிரேட் இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<>>>>>**

விமானத்துறையின் வளர்ச்சியில் உடான் திட்டம் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டுவந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்த திட்டத்தின் எட்டாம் ஆண்டு தினத்தையொட்டி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் பலனாக விமான நிலையங்கள் மற்றும் விமான வழித்தடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமானத்துறையின் வளர்ச்சிக்கு தொடர்ந்து உத்வேகம் அளிக்கப்படும் என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய சிவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு, உடான் திட்டம் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

இந்த திட்டத்தின்கீழ், தொலைதூர பகுதிகளுக்கும் விமான சேவை வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் கடந்த பத்தாண்டுகளில் புதிதாக 86 விமான நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உடான் திட்டம் தொடங்கப்பட்டபின்னர் 2 லட்சத்து 84 ஆயிரம் சேவைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்

இந்த திட்டத்தின்கீழ், சேலத்திலிருந்து பெங்களூருவுக்கும், கொச்சிக்கும் இயக்கப்படும் விமான சேவை தங்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக உள்ளது என்று அம்மாவட்டத்தை சேர்ந்த பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - பயனாளி – 43 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கவேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் கனவை நனவாக்க காவல்துறை உறுதிபூண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

காவலர் வீர வணக்க தினத்தையொட்டி இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கலந்துகொண்டு அவர் பேசினார்.

காவல்துறையினர் நலனுக்காக பிஜேபி தலைமையிலான மத்திய அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த காவலர்களின் நினைவாக, தேசிய காவலர் நினைவகம் புதுதில்லியில் அமைக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கை காரணமாக நக்சலைட் பிரச்சினை கட்டுக்குள் உள்ளதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஜவுளித்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு **Pabitra Margherita** கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஜவுளித்துறை 2 ஆயிரத்து தொள்ளாயிரத்து 42 கோடி ரூபாய் அளவிற்கு வளர்ச்சியை எட்டும் என்று கூறினார்.

உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் ஜவுளித்துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்துள்ளதாகவும் திரு **Pabitra Margherita** தெரிவித்தார்.

<<<<<>>>>>

இடஒதுக்கீட்டின் பலன்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதுதான் பிஜேபி-யின் நோக்கமாகும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய இணையமைச்சருமான திரு எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - முருகன் - 49 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தீபாவளி பண்டிகையையொட்டி, 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - சிவசங்கர் - 44 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தீபாவளி பண்டிகையன்று கடந்த ஆண்டைபோலவே காலை 6 மணிமுதல், 7 மணி வரையிலும், இரவு 7 மணிமுதல் 8 மணி வரை மட்டுமே பட்டாசு வெடிக்க வேண்டும் என்று தமிழக அரசு கேட்டுக்கெண்டுள்ளது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பட்டாசுகளை வெடிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலம் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிக மாசு ஏற்படுத்தாத பட்டாசுகளை அரசு அனுமதித்துள்ள நேரத்தில் உரிய இடங்களில் கூட்டாக வெடித்து மாசற்ற தீபாவளியை பொதுமக்கள் கொண்டாட வேண்டும் என்றும் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

<<<<<>>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, தீவிர புயலாக வலுவடைய வாய்ப்புள்ளதாகவும், இது மேற்குவங்கம் - ஒடிஷா இடையே கரையை கடக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் புதிய கட்டிடத்திற்கான கட்டுமானப்பணிகளை மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

மதுரை மாவடடத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் புகார் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆட்சியர் திருமதி சங்கீதா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

-------------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

---------------

காஞ்சிபுரத்தில் உள்ள அருள்மிகு நகரீஸ்வரர் கோவில் கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

வளரும் அணிகளுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா "ஏ" அணி இன்று ஐக்கிய அரபு எமிரேட்டை எதிர்கொள்கிறது.

ஓமனில் நடைபெறவுள்ள இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

-------------------

தமிழக – தில்லி அணிகளுக்கு இடையிலான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டி டிராவில் முடிவடைந்தது.

தில்லியில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளான இன்று, 8 விக்கெட் இழப்பிற்கு 264 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிய தில்லி அணி, 266 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனைத்தொடர்ந்து, பாலோ ஆனை பெற்று இரண்டாவது இன்னிங்சை ஆடிய தில்லி அணி, ஆட்டநேர இறுதியில் 8 விக்கெட் இழப்பிற்கு, 193 ரன் எடுத்தது.

தமிழக அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு, 674 ரன் எடுத்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

**<<<<<END>>>>>**